# நெடுந்தீவு பிரதேச சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 05 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய நெடுந்தீவு பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி நெடுந்தீவு பிரதேச சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்குகளுடன் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிசார் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என சந்தர்ப்பங்கள் மற்றும் பெறுமதிகளின் கீழ் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | சொத்துக்கள் | | பொறுப்புகள் | | வருமானம் | | செலவினம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா | | ரூபா | | ரூபா | | ரூபா |
| நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் கூறல்கள் | - | - | - | - | 01 | 1,200 | 01 | 62,762 |
| நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் கூறல்கள் | - | - | 02 | 1,431,914 | - | - | - | - |
| கணக்குகளில் விடுபாடுகள் | 01 | 25,000 | - | - | - | - | - | - |

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,138,392 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

**கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் இன்மை காரணமாக மொத்தம் ரூபா 1,011,681 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.5 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள். விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(அ) ஆம் பிரிவு | ஆண்டொன்றில் ரூபா 1,000 இற்கு மேல் மத ரீதியான மற்றும் பொது வேலைகளிற்காக செலவிடுகையில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 9,475 ஆனதோர் தொகை உபசாரச் செலவினத்திற்காக செலுத்தப்பட்டிருந்தது. |

(ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம்

153 ஆம் பிரிவு — ரூபா 16,706 ஆன நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு அனுப்பி வைக்கப் பட்டிருக்கவில்லை.

(இ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி அதிகாரச்சட்டம் — ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான சபையின் உதவுதொகை ரூபா 2,150 சபையினால் அனுப்பிவைக்கப் பட்டிருக்கவில்லை.

(ஈ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி அதிகாரச்சட்டம் — தற்காலிக சாரதி ஒருவரிற்கான ரூபா 8,599 ஊழியர் சேமலாப நிதி மற்றும் ரூபா 5,733 ஆன ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வட மாகாண சபையின் நிதி ஒழுங்குவிதிகள்

VI ஆம் அத்தியாயத்தின் 05 ஆம் பிரிவின் 237 ஆம் உப பிரிவு — ரூபா 540 பெறுமதியான சமர்ப்பிக்கப்படாத காசோலை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

(ஊ) தாபன விதிக்கோவை

VIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு — விடுமுறைதினக் கொடுப்பனவு ஒரு நாளைக்கு மாத்திரம் வரையறுக்கப் பட்டிருந்த போதிலும் சபையின் செயலாளரிற்கு 10 தினங்களிற்காக ரூபா 7,790 செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 1,069,922 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 574,962 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2010 பாதிடப்பட்டவை | 2010 உள்ளபடியானவை | 2010 31 திசெம்பரில் திரண்ட நிலுவை | 2009 பாதிடப்பட்டவை | 2009 உள்ளபடியானவை | 2009 31 திசெம்பரில் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| வாடகை மற்றும் வரிகள் | 170 | 72 | - | 176 | 111 | - |
| குத்தகை வாடகை | 147 | 171 | 52 | 147 | 93 | 43 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 26 | 63 | - | 28 | 22 | - |
| ஏனைய வருமானங்கள் | 8,375 | 7,397 | - | 7,710 | 5,635 | - |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

2010 திசெம்பர் 31 வரை பல்வேறு நியதிச்சட்டங்களின் கீழ் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தினால் சேகரிக்கப்பட்டு பிரதான செயலாளரிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் பட்டோலைகள் சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

2010 ஆம் ஆண்டிற்காகப் பெற்றப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| ஆளுக்குரிய | | | | | | |
| வேதனம் | 6,327 | 5,285 | 1,042 | 6,004 | 4,119 | 1,885 |
| ஏனையவைகள் | 2,368 | 1,349 | 1,019 | 2,008 | 1,167 | 841 |
| உப மொத்தம் | 8,695 | 6,634 | 2,061 | 8,012 | 5,286 | 2,726 |
| **மூலதனச் செலவு** | 10,300 | 2,905 | 7,395 | 5,150 | 2,833 | 2,317 |
| முழு மொத்தம் | 18,995 | 9,539 | 9,456 | 13,162 | 8,119 | 5,043 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியனர் எண்ணிக்கை

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| **பதவி வகை** | **அங்கீகரிக்கப்பட்டவை** | **உள்ளபடியானவை** |
|---|---|---|
| பதவிநிலை மட்டம் | - | - |
| இரண்டாம் மட்டம் | 06 | 04 |
| ஆரம்ப மட்டம் | 10 | 10 |
| ஏனையவர்கள் (சமயாசமயம்/தற்காலிகம்) | - | 07 |
| மொத்தம் | 16 | 21 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 399,269 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 199,215 ஆகும்.

### 2.5.2 அதிகாரமின்றிய கொடுக்கல்வாங்கல்கள்

ரூபா 135,000 முன் பள்ளி ஆசிரியர் சம்பளம் மற்றும் ரூபா 9,010 நெல்சிப் செயற்திட்டச் செலவினம் என்பவற்றினைச் செய்வதற்கு முன்னர் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132 (ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரின் எழுத்துமூல முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.5.3 செயலாற்றல்

கணக்காண்டின் தொடக்கத்தில் சபையினால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்த குறிக்கோல்கள் மற்றும் அதன் மீதான செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்ய முடியவில்லை.

### 2.6 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபையில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான நிர்வாகம்

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) கணக்கீடு

(ஈ) மோட்டார் வாகனங்களின் கட்டுப்பாடு

(உ) மீளளிக்கப்படவேண்டிய வைப்புக்கள்